# அவலை அடைகாப்பு

## கவிதைத் தொகுதி

கமலசுதர்சன்

# அவல அடைகாப்பு

கமலசுதர்சன்

Aalvala Adaikappu - Collection of Poems.
Author - K.Sutharsan.
Address - 'Ambikai Vasam',
'Branmin's Lane'
Thumpalai west, Thumpalai,
Point Pedro.
First Edition - November 2009
Copies - 500
Pages - 85
Publishers - Ambiakai
Printing - S.P.M.Printers.
Drawing - K.Kailasanthan
Cover design - Harihanan Printers,
Jaffna.
**Price** - 150/=

மதுரை கலாநிதி க.சச்சிதானந்தன்
அவர்களுக்கு

# நாளைய ஆனந்தத்தின் பாடல்

'அவலஅடைகாப்பு' , கமலசுதர்சனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. ஏற்கனவே 'மௌனமே வாழ்வாக' என்ற தொகுப்பை வெளியிட்டு இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர், குறிப்பாக சாயிபக்தர், எம்மை மீறிய செயல்கள் நடக்கிற கையறுநிலைகளில் தெய்வத்தை - சாயியை வேண்டித் துதிப்பவர். மானுடநேயர், இயற்கை உபாசகர், தத்துவத்தேடல் மிக்கவர். பதின்ம வயதிலுள்ள வித்தியாசமான இளைஞர், அவருடைய தேடல்கள், ஆசைகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், கண்ணீர் கதைகள் எல்லாம் ............... சிறுசிறு துணுக்குகளாக, துண்டுகளாக 'கவிதை வடிவில்' இங்குகளம் காண்கின்றன.

'புனிதத்தின் புனிதமே
புட்டபர்த்தி பெருமானே!
பூக்களும் பிஞ்சுகளும் உதிரும்
எம் தேசத்தில்
சுபீட்சமான வாழ்வு மலர ........................'

என்று கவிதையிலேயே எழுதுகின்றார். இதில் 'பூக்களும் பிஞ்சுகளும் உதிரும்' எம் தேசம் எனும் வரிமுக்கியமானது. இவரது கவிதை நெடுகிலும் இந்த மனஉளைச்சல், ஒரு வேதனையின் சுருதியோடு இழையோடுகிறது.

இத்தொகுப்பிலுள்ள ஏறத்தாழ முப்பத்தைந்து கவிதைகளின் (நான்கைந்து மொழி பெயர்ப்புக்கவிதை உட்பட) பாடு பொருளும் அனேகமான மானுட நேயம்தான்.

"பட்டமரங்கள் துளிர்க்காவிடினும்
பசு மரங்கள் கருகுவதைக் காத்தருளும் கர்த்தரே'

'பல நாள் பட்டினியான பாமரனுக்கு
என் உணவில் ஒரு பாகம்'

'ஏழைகளின் மணிமகுட'சொப்பிங்பைகள்',
அவர்களது வீட்டுப் பாத்திரங்கள்
ஒழுகுகள் வழியாவது இன்று நிறைந்தது'

'மனிதம் எனும் விதை தூவி
பூமி என்ற பூங்காவனம்
புன்னகைப் பூக்களை பிறப்பிக்கட்டும்' - என்றெல்லாம்
தன் மனித நேயக்குரலைக்காட்டும் கவிஞர்,

'கந்தகக் கலப்பில்லாத காற்று
சதை தின்னும்,
கழுகுகுள் பறக்காத வானம்
துப்பாக்கி முனைகளிலும்
மலர் பூத்த பொழுதுகள்................' என்று
தான் கனவு காணும் இலட்சிய உலகை பாடுகின்றார்.

இவருடைய எழுத்துக்களில் ஆங்காங்கே சமாத்காரமாய் கையாளப்பட்ட கவிதை தோய்ந்த வரிகள் எம்மை பிரமிக்க வைக்கின்றன.

"இதிகாச புராணங்கள்
ஆயுதங்களுடன்
அவதாரங்களை
அறிமுகம் செய்தன." என்று முதல் கவிதையிலேயே முதலாவது வரியிலேயே தன்னை வெளிப்படுத்தும் கவிஙர்,

" இதயத்தைக் கழற்றி விட்டு
இயந்திரமாகிவிட்டேன்"

" குறிஞ்சிப் பூவாய் மலர்வனவும்
குழி தோண்டிப் புதைக்கப்படும்"

" ........................... வார்த்தைகளே
வேதம் என்றாய்
மௌனங்களை மொழி பெயர்த்தாய்"

"........................... மௌனத்தை

"மழை நேர நாயாய்
மனையிலே தங்கத்துடித்தது மனம்"

" இடறுப்பட்டது உன் உயிர்
சபிக்கட்டது உன் வாழ்வு"

என்றெல்லாம் எழுதி,இடையறாது தன்மனதில் ததும்பிக் கொண்டிருக்கும் கவித்துவத்தை வெளிக்காட்டுகின்றார்.

அவலங்களைக் கண்டு துடிக்கின்ற மனங்கொண்ட வித்தியாசமான இளைஞர் தான் இவர்.

'கடுக்கன் அணிந்து
காடைபோல் தலை வளர்த்து
சினன்வயது 'T' சேட் போட்டு
இறுக்கமான 'டெனிமை' கொழுவி
மோட்டார் சைக்கிளில்
வட்டமடிப்பதோடு முடிகிறது வாழ்வு'

என வாழ்பவரல்ல இவர். எந்தவிதமான ஏற்றத்தாழ்வு களுமில்லாமல், மனிதர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக வாழவேண்டு மென்று' கனவு காண்டபவர், அதற்காக பிராதிப்பவர். தோற்றத் திலும் எளிமையும் துடிப்பும் மிக்கவர்.

இயற்கை அழிவுகள், யுத்த அழிவுகள், அவலங்கள் துன்பங்கள் என்பனவற்றிலும் மத்தியிலும், நம்பிக்கைகளைத் தொலைக்காத ஓர் எதிர்பார்ப்பு - இதுவே இவரது கவிதையின் தனித்துவம் - பலம் என்பேன்.

'............................... நாளைய
ஆனந்தத்தின் பாடலைப்பாடியபடி
ஆற்றவோம் ஆகவேண்டியவைகளை ...............' என்று

ஒரு கவிதையில் முத்தாய்ப்பு வைக்கின்றார். இதில் 'நாளைய ஆனந்தத்தின் பாடல்' என்பது முக்கியமானது. ஆனந்தத்தை எதிர்பார்க்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கை.

இறுதியாக இவரது கவிதை உத்திகள், வடிவம் பற்றி ஒன்று சொல்ல வேண்டும். இவரது பெரும்பாலான கவிதைகளில் வசன கவிதைத்தன்மை விரவியிருக்கிறது. இவரது கவிதைகளில் எனக்கு மிகவும் பிடித்த கவிதையில் சில வரிகளை இதற்கு உதாரணம் காட்டலாம்.

'என்னளவில் பிரார்த்தனை' என்ற கவிதையை இந்த வடிவிலும் எழுதலாம்.

'காலை எழுந்ததும் எதிரே வருபவர்க்கு
புன்னகை பூக்களை வீசுவேன் இயன்றளவும்
இன் சொல்லால் அர்ச்சிப்பேன். வதிக்கு வருகின்றேன்.
பார்வை பறிபோனவருக்கு பாதையைக் கடக்க உதவி,
அப்பால் செல்கிறேன் ................'

என என நீண்டு செல்லும் கவிதை வரிகள்.

முடிவாக இவரே ஒரு கவிதையில் சொல்வது போல

'சுவை ஒன்றைச் சுவைத்தே உணரமுடியும்',
அது போல நீங்களும் இக்கவிதைகளை வாசித்தே
அனுபவிக்கமுடியும். இந்த வித்தியாசமான கவித்துவ
உணர்வுகள் மிக்க இளைஞரின் எதிர்காலம் சிறக்க,
இவரைப் போல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

*குப்பிழான் ஐ.சண்முகன்.*

## நான் கவிதைஎழுதுவதில்லை, கவிதைதான் என்னை எழுதிக்கொள்கிறது.

ஒரு வருட கால நிறைவின் பின் உங்களை பெருமகிழ்வோடு சந்திக்கின்றேன், 'இதயக்கனலை முட்ட இரவல் நெருப்பு கேட்பாருண்டோ' என்பான் ரசூல்கம்ஸ்தேவ், கவிதை தனிப்பட்ட ஒருவனின் குரலல்ல, மானுடத்தின் குரலாகும். என் எதிர்கால கல்வி முயற்சிகளை கருத்திற் கொண்டும்,
கவிதை எழுந்த காலத்திலேயே அவை வெளிவரவேண்டும் எனும் காரணங்களுக்காக ஒரு வருட நிறைவில் இப்போது 'அவல அடைகாப்பு' வெளிவருகிறது.

கவி மனத்தினால் புயல்காற்று முதல் இனைத்துமே, பூனையின் மரணம் கூட 'புல்லியது' என ஒதுக்க முடியாத நிலை உள்ளது. உலகத்தின் ஒவ்வொர சிறு அசைவுகளம், வெளிப்படையில் தெரியாத தொடர்புகளும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக தெரிகிறது எனக்கு.

"கஞ்சியில்லை என்ற சொல்லை
கப்பலேற்றுவோம் - செகத்தை
ஒப்பமேற்றுவோம் !! என்றார் பட்டுக்கோட்டையார்.
இந்நூலின் மூலம் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை அவலப்படும் என் உறவுகளுக்கு
கொடுப்பதென தீர்மானித்துள்ளேன்
(எழுத்து செயல்வடிவம் பெறுவது வெற்றியின் அறிகுறி) என்பதில் எனக்கு திட நம்பிக்கை.

'உறுதி உறுதி உறுதிக்கோர்
குலைவுண்டாயின் இறுதி இறுதி இறுதி' என்றான் பாரதி
காலம் எனக்கு திடநம்பிக்கையை
தீர்க்கமாக தந்திருக்கிறது.
துடுப்பாட்ட மட்டையை ஏந்தி எகிறி வருகின்ற பந்தை 'அடித்து நொருக்குவேன்' என்ற உறுதியோடும், அணிக்காக புயல்பொல் புறப்பட்டு விக்கெட்டுக்களை சரித்த சந்தொசத்தை பகிர்ந்து கொண்ட பொழுதுகள்தம் பிள்ளைகளுக்காக பாடசாலைக் காலமதில் தம் ஓய்வைக் கூட செலவு செய்த ஆசான்கள் கல்வியோடு பிற்கலந்த நிகழ்வுகள், நண்பர்களோடு அரங்காடிய அற்புதக்கணங்கள் வாழ்க்கையை எதிர்கொள்ளத்தயாராய் பல்கலை ஏணிக்கு ஏற்றியதை நன்றியோடு நினைக்கின்றேன்........... சம்பவங்களில் கூர்மையாய் அவதானிக்க இயற்கையின் அசைவுதோறும் இன்பம் நுகர்ந்து, மடைதிறந்து கவிதை பெருக்கெடுக்க, தாள்கள் கொண்டு அணைபோட்டும் இரவு உறக்கத்திலும் கவிதைக்கருவை உருப்போடு அதிகாலை எழுந்து பேனா மூடி துறந்து போராட்டம் நிகழ்த்தி அமைதி கொண்டு எழுதிய கவிதைகளை செம்மை செய்து காலமெல்லாம் என்னை களிப்போடு கட்டி வைத்திருக்கிறன் இறைவன்.
**'நான் கவிதை எழுதுவதில்லை**
**கவிதை தான் என்னை எழுதிக்கொள்கிறது.?**
அனுபவம் எனும் சமுத்திரத்தில் மூழ்கி முத்தெடுத்ததை 2ம் புத்தகமாக தொகுத்திரக்கிறேன். காலச்சக்கரத்தில் சுழன்றாலும் கடந்து வந்த பசுமை நினைவுகள் உள்ளே... காலம் செலவு செய்த பெரியோர்களை நினைவு கூர்ந்திருக்கிறேன். அவர்கள் ஆற்றிய அரும்பணிக்காக.

மானுடம் எனும் கட்சி நிலை நின்று (கருத்துக்களை) பாடியிருக்கிறேன். அரசியல் ரீதியான தெளிவும் சமூக உயர்வுக்கு அவசியமானது என்பதற்காகவும், நிகழ்ந்தவைகளை வருங்காலச்சந்ததி மனதிருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும்........................ பெண்ணியத்தோடு, 'ஆணியம்' தொடர்பான சிந்தனைகளை நிலவவிட முயல்கின்றேன். மீண்டும் சந்திக்கும் வரை.

*அன்புடன்.*
*-கமலசுதர்சன்-*
*10.10.2009.*

# நன்றி

ஜீவநதி

ஞானம்

நடுகை

புதிய நிலா

நீங்களும் எழுதலாம்

அம்பலம்

# நன்றி பகர்தல்

**ஆசிரியப் பெருந்தகைகள்**

செல்வி. கல்யாணி நமசிவாயம்

திரு. பா. இரகுவரன்

சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள்

அருட்தந்தை. எஸ். டேமியன் அடிகள்

**பெற்றோர்**

**சகோதரர்கள்**

சுதாகரன்

உமா

சிவதர்சினி

சுபஹரி

அபிராமி

**அன்பர்கள்**

ஓவியர் கோ. கைலாசநாதன்

குப்பிழான் ஐ. சண்முகன்


‘இலக்கியச் சோலை’ இ. து. குலசிங்கம்

S.P.M. Printers

ஹரிகணன் Printers

ஓம் சாயிராம்

## இதயத்தில் அன்பு மலரும் திருநாள்



இதிகாச புராணங்கள்
ஆயுதங்களுடன்
அவதாரங்களை
அறிமுகம் செய்தன.
இறைவன் வாழும் காலத்தில்
'பிறவாமல் வீணாகும் வாழ் நாள்' என
தேவர்களே புலம்பும்
பெறற்கரிய மானிடப்பிறவி
அளித்த ஆரமுதே!
அன்பின் ரூபமே!!
புனிதத்தின் புனிதமே
புட்டபத்தின் பெருமானே!
பூக்களும், பிஞ்சுகளும் உதிரும்
எம் தேசத்தில்
சுபிட்சமான வாழ்வு மலர – ஒரு
பார்வை, சிறு வார்த்தை
மலர்ந்தருளாயோ?

கிருஷ்ண ஜெயந்தியிலும்
கிறிஸ்மஸிலும்
உன் பிறப்பை
கொண்டாடுவோம்

ஆதியும் அந்தமுமில்லா
அருட்பெரும் சோதியே
உண்மையில் எப்போது
உன் பிறப்பு?
இதயத்தில்
அன்பு மலரும்
திருநாள் அந்நாள்
உன் பிறந்த நாள்
உன் புகழ் பேசா நாளெல்லாம் - அவை
நாளல்ல பாழே.

23.11.2008.

(பகவானின் பிறந்த நாளன்று பருத்தித்துறை சாயி சேவா நிலை. அரங்கேற்றம்)





## நல்ல மேய்ப்பரே வருக!



தொழுவத்தில் அவதரித்ததாலே
எளிமையை உலகத்தவர்க்கு போதித்தீர்
உம்மைப் போல அயலவனையும் நேசித்தீர்
'ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தைக்காட்டு' என்றீர் - எமக்கு
முகங்களும் முகவரிகளும் இல்லையே
நாம் என்ன செய்வோம்?
உமது வார்த்தைகளை முட்கிரீடங்களாக
வருத்தத்தை தர வினாக்களாக தொடுக்கவில்லை
வன்மையான பாரச்சிலுவையை சுமத்தும்
நோக்கமுமில்லை.

பொல்லாத யூதர்கள்

சொல்லொணா துன்பங்கள் விளைவித்த போதும் - நொந்தொரு
வார்த்தை பேசாதவரே!
பட்ட மரங்கள் துளிர்க்காவிடினும்
பசுமரங்கள் கருகுவதை காத்தருளும் கர்த்தரே................
'புத்திரர்களை பெறாதோர் பாக்கியசாலிகள்' என
புலம்பும் காலம் இது தானோ?
'மலைகளே குன்றுகளே - எம்மை
மூடிக்கொள்ளுங்கள்' என்று உரைப்பதோ?
எங்கள் வேண்டுதல்கள்
உங்கள் செவியை எட்டவில்லையா?
பிரார்த்தனைகள்
இதயக்கதவுகளை தட்டவில்லையா?

மாண்டார் உயிரளிக்கும் மருந்தே!
'தகனப்பலி மறியாய்'
பரிதவித்து நிற்கின்றோம்
பாவிகளை ரட்சிக்க - நல்ல
மேய்ப்பரே வருக!

(இரட்சணிய யாத்திரிகம் கற்றதனுடைய அருட்டுணர்வு)

25.12.2009





## என்னளவில் பிரார்த்தனை..........



காலை எழுந்ததும்
எதிரே வருபவர்க்கு
புன்னகைப் பூக்களை
வீசுவேன்
இயன்றளவும்
இன்சொல்லால்
அர்ச்சிப்பேன்
வீதிக்கு வருகிறேன்
பார்வை கடக்க உதவி
அப்பால் செல்கின்றேன்
பல நாள் பட்டினியான
பாமரனுக்கு - என் உணவில் ஒரு
பாகம்

நான் சின்னவயசில்
'போட்டுக் கழித்த' ஓலை குடிசைக்குள்
ஒரு தீபமாயினும் ஒளிர வேண்டும்
கங்கைக்கரையின் நின்று
கிணறு தோண்டத் தேவையில்லை;
கடவுளுக்கு உன் சேவை
தேவையில்லை
ஏழையின் சிரிப்பில் தான்
ஏகனான இறைவன் மலர்வான்
என்னளவில் பிரார்த்தனை என்பது
இது தான் ............




## பருத்தி மாநகரே.......................................................



பருத்தியே நீ தான் எம் நெஞ்சில்
துருத்தி நிற்கிறாய்!
அணி செய்யும் ஆலயங்கள்
அன்பின் பாலங்கள்
கடல் அலைகள் 'கபடி' ஆடும் நடராஜர் அரங்கம்
கல்விப்பாரம்பரியம் பேணும் கல்லூரிகள்
நாளையை சேமிக்கம் வங்கிகள்
வாணிப நிலையங்கள் என
வகை வகையான தேவையறிந்து
நிவர்த்திக்கும்
தேவதச்சகர்களே உன்னைநிர்மாணித்து
ஆட்சி புரிவதாக புலப்பாடு எனக்கு உண்டு
கட்டடங்களகளால் தானோ நீ முழுமை கொண்டாய்?
இல்லவே இல்லை!

'நன்மக்கள் வாழும் நிலமே
நன்நிலம்' என்று சொன்ன ஔவை
இன்றிருந்தால்
பருத்திமாநகரே! ...................................
உன்னையும் பட்டியலில் சுட்டியிருப்பாள்
சாக்கடை அள்ளும் கைகளுக்கு
சந்தனம் பூசுவோம்
சாலை மருங்குகளில் மரம் நாட்டுவோம்
மேடு, பள்ளம் எனும் பேதங்கள் – உன்
மேனியில் கூட மறைந்து போகட்டும்
நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்தாலும்
அனுபவரேகைகளும் அழகு ஊட்டுகின்றன.
வழிப்போக்கர் இளைப்பை போக்கும் திண்ணைகள் , சுமைதாங்கிகள்
அஃறிணைக்கும் பேதமின்றி
ஆவுரோஞ்சி கற்கள்.................

*** *** ***





## சங்கரா யார் கொலோ சதுரர்?



கடலம்மா...!
நாம் செய்த பிழை என்ன?
பிறந்தது முதல்
உருண்டு புரண்டு விளையாடி
உறவென உற்றதுணையென
மகிழ்ந்திருந்தோம்
உனக்கு இன்னொரு முகமும் உண்டென
உணர்த்தவா இவ் ஊழிக்கூத்து
டைனமற் எறிந்து மீன்பிடித்தமா?
தோண்டித் தோண்டி
ஆழம்பார்க்க விழைந்தோமா?
அணுக்கழிவுகளை கொட்டினோமா?
ஆனந்த ஆர்ப்பரிப்பை அணைகட்டி தடுத்தோமா?
பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என தேற்றவா ? விலங்கிட்டோமா?
பொறுத்து போதும் என
பொங்கி காடுகளை ஆண்டனையோ?
எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
நீண்ட நிஷ்டையில் அமர்ந்துவிட்ட
நிர்மலனே
பகீரதன் கங்கையை பூமிக்கு அழைத்த போது
சடை கொடுத்தீர்!!
செம்மனச் செல்விக்காக

பிட்டுக்கு மண்சுமந்து
பிரம்படி பட்டீர்!!!

பூமாதேவியவள்
பெருங்குரலெடுத்து புலம்பியபோதும்
அணைபோட வராதேனோ?
மனிதக்கருவாடுகள் இஞ்ச மலிவு என
மரணவியாபாரி முணு முணுத்தானாம்!

வேர் ஊன்றிய மரத்தை புடுங்கி
வேறோர் இடத்தில் நட்டால்
சில சமயம் துளிர்க்கலாம்!
'தோப்பையே தொலைத்துவிடு' என
கடலம்மா! உனக்கு கோள் மூட்டியது யார்?

இழப்பீடுகளாம் ........................................?
'பிச்சை எடுத்தானாம் பெருமாளு – அதை
பிடுங்கி தின்னானம் அனுமாரு' என
கைக்கெட்டியதும் வாய்க்கு எட்டவில்லையே....................
உதிர்ந்த உயிர்களுக்கு என்ன உயில் எழுதுவீர் ?

'நீ உறங்கி விட்டாயா' என அறிய
கொள்ளளிக்கட்டையால்
தொட்டு தொட்டு பார்த்த
பரமார்த்த குருவும் சீடருமாய்
சில கணக்கெடுப்புக்கள் , எச்சரிக்கைமையங்கள்

மனக்குமுறல்களை
மலர்க்கணையாய் தொடுக்கிறேன்
சாம்பலாக்குவீராமே!
சங்கரா யார் கொலோ சதுரர்?

26.12.2004.





## உன் திருமுகம் !

கிழக்கில் வாழும் என் சோதரியே
'வடக்கிருக்கும் ' உன் தம்பி எழுதுவது
'எல்லோரும் இன்புற்றிருக்க
வேண்டுவதெல்லாம் வேறொன்று
அறிகிலேன் பராபரமே '
உம்மடல் கண்டு உவகை கொண்டேன்
அலுவலக கோப்புகளுக்குள்
அனுதினம் மூழ்கிப் போனாலும்
மாதம் ஒரு முறை மாதூரம் தாண்டி
என் தேக கூடு தேடி விரைந்தோடி வரும் உயிர்ப்பறவையல்லவா
உன் மடல்!
திருமுகம் – ஆம்
இதில் தான் செழுமை பொங்கும்
உன் வதனத்தை தரிசிக்கிறேன்
சாலப் பொருத்தமான பெயர் இது.
காலத்தோடு ஓடிக்கொண்டிருப்பவர்கள் ஆதலால்
'ஈமெயில்' (E-mail) முகவரி இருந்தாலும்
தபாற்காரனின் வரவையல்லவா நான்
தம்பி பார்த்திருப்பான்.
ஏனென்று கேள்!
நவீனத்தை ஏற்றுக்கொண்ட போதும்
மரபு என்ற ஒன்றை முற்றாக மறுத்தவன் – இல்லை நான்
மரபினடியாக எழும் நவீனத்துள்
கலந்தவன் தான் அது தான் காரணம்
கோபத்தில் கொதிக்கும் போதெல்லாம்
குளிர்விக்கும் கூசாத்தண்ணீர் போல்
வரும் வார்த்தைக்குள் நான்
அடங்கிப் போகிறேன்.

உனக்கு மடல் வரைகையில்
உதிரமும் உணர்வும் கண்ணீரும் கலந்து
உண்மையை வடிக்கும் என்பேனா
உள்ளத்தின் அடியிலிருந்து எழும்
சொற்கள் எழுத்தாகும்.

உன் திருமுகத்தை வாசிக்கையில்
என் அருகில் நீ பேசுவது போலிருக்கும்
வார்த்தைகள் உயிர்வரை சென்று சேரும்
கன்னியாவின் வெந்நீர் ஊற்றாய்
என் மனம் .................

உன் திருமுகம் கண்டு
என் முகம் மலரும் சோதரி
என் அகம் நிறையும் காண்

நீ எனக்கு இளைய தாய் அல்லவா
உனக்கு இந்த இளவல் சேய் அல்லவா!
நீ இருக்கும் திசை தான்
என் வானுக்கு கிழக்கல்லவா!.





## தமிழர்களின் துயரமும் வாய்ப்பந்தல் நிழலும்

மனதைப் போலவே குள்ளமான தோற்றம்
தள்ளாத வயதிலும் தீராத பதவி மோகம்
கனமிக்க கறுத்த கண்ணாடி
கரகரத்த குரல் கரவு கொண்ட குணம்
சீனாவின் துயரம் 'மஞ்சள் ஆறு'
தமிழர்களின் துயரம் 'மஞ்சள் துண்டு'

முத்துக்குமாருக்கு இருந்த தமிழின உணர்வு கூட
முத்துவேலு கருணாநிதிக்கு இல்லாது தான் உலகம் புரிந்து கொண்டது
'தமிழின தலைவர்' என தனக்குத் தானே முடிசூடிக் கொண்டவர்
ஊடகங்களின் செய்திக்காக
அவ்வப்போது இந்தியப் பிரதமருக்கு
சம்பிரதாயக் கடிதங்கள் எழுதுவதில் சமர்த்தர்!
தனது அரசியல் நாடகங்களுக்காக
திறம்பட நல்ல வசனங்கள் எழுதுவார்.
'கலைஞர்' அல்லவா?
'உண்ணாவிரதம்' என்ற சமீபத்திய நாடகம் தான்
உலக அளவில் பிரபலமானது
சாயம் வெளுத்து சந்தி சிரித்தது – நாம்
மாண்டு கொண்டிருக்கையில்
'மானாட மயிலாட' வெற்றிவிழா நடாத்தினார்
கண்ணீரோடு உதவிக்கரம் யாசிக்கையில்
கலையுலகம் திரண்டு கலைஞருக்கு விழா எடுத்தது.

நவீன நீரோ மன்னன்
ஈழம் எரிகையில் பீடில் இசைத்தவர்!
வயோதிபம் வந்து வாக்கு மாறியதால்
சித்திரைப்புத்தாண்டை தை மாதம் கொண்டாகுக என அறிவித்தார்.

வேட்டிகளும் சால்வைகளும் மாறியும்
மாறாதது எம் அவலம் ஒன்று தான்


நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளோ நாடு நாடாக தம் குடும்பத்தினரோடு சென்று
நம் பிரச்சினைகளை கதைக்கினம்!
அடுத்த தேர்தலின் போது
நம் வீட்டு படியேறுவார்கள் அப்போது
நாம் நன்றாக 'படியளக்க வேண்டும்'
நம்மவரே இப்படி
அண்டை வீட்டான் எம்மாத்திரம்?

எமது அரங்குகளில் உம்
நாடகம் இனி நிகழாதது என
நான் உலகுக்கு உரத்து கூறுவேன் கலைஞரே!
இவர்களின் வாய்ப்பந்தல்
நமக்கான நிழலைத்தராது.





# நிகழ் காலத்தோடு



ஒருவர் மட்டும் சௌகரியமாய்
தங்கக் கூடிய ஒடுக்கமான அறை
பால் நிலவு பொழிய கூரையில் கண்ணாடி
காற்றை தவணை முறையில் விடுவதற்கு ஐன்னல்

நேற்றைய தினசரி,
இரு புத்தக அலுமாரிகள்
அலுமாரிகளில் என் ஆத்ம நண்பர்கள்
கைத்தொலைபேசி அருகே
'ஆனைக்குப் பசி சோளப்பொரியென
கடித்து துப்பிய காட்டுக்கள் (Card)
கணனி சுழல் கதிரை
சுவரில் மாட்டப்பட்டுள்ள
அழகிய படங்கள்
ஆனாலும் எனது அறை
நிகழ்காலத்தோடு பயணிக்கிறது

என்பதில் நிச்சயமாய் நம்பிக்கை
மூடையில் குப்பைக் கூடை
பழைய அஞ்சல் உறைகள்
ஆரம்பத்தில் எழுதி கசக்கிய
கவிதை ஒத்திகை பார்த்த ஒற்றைகள்,
சில ஆங்கிலப் புத்தகங்கள்

ஆனாலும் நிகழ்காலத்தோடு
எனது அறையும் நிச்சயமாய்
பயணிக்கிறது என்பதில்
திடமான நம்பிக்கை





## சாகரா சங்கமிப்போம்!



நெடுநாட்களின் பின் சந்திக்க வருகின்றன்
உன்னையும் என்னையும் இணைத்தது எதுவெனில்
கொந்தளிப்பான மனநிலை தான் என்பேன்
எனைக்கண்டதும் ஓடோடி வந்தாய்
நுரை நுரையாய் மூச்சிரைக்க - உன்
நட்பில் நான் நனைந்தேன்!
உன் போல் முயற்சியாளன் மேதினியில் இல்லவே இல்லை
கரைமீது வந்து ஆயிரமாயிரமாய் கவிதைகள் வரைவாய்
எழுவாய் பின் விழுவாய் ஓய்ந்திருக்க மாட்டாய்!!

நதிகள் பல சேர்ந்து உன் அகம் விசாலித்திருக்கின்றது.
நான் என் திசைகளை அறிந்து வேர்களை தேடுகிறேன்
நிலை கொள்ள விழைகிறேன், விழுதுகளை ஈன்று
அவனி இளைப்பாற நிழல் கொடுத்த பின்
'மானுட பந்தம்' எனும் விலங்கொடித்து வருவேன்
அந்நாளில் நாம் சங்கமிப்போம் தேகம் எனும் நிலை
கடந்து ஓர் பாகமாவோம்!!!

காற்றோடு கலந்து விடமாட்டேனோ?
மலர் போல் மலர்ந்து மணம் வீசேனோ? எனும்
ஐக்கிய நிலைகளை அடைவாம்
இயற்கையோடு இயற்கையாய் இணைந்து
அது வரை பொறுத்திரு என் அன்புத் தோழா – உன்
அலைக்கரங்களை அசைத்து இப்போதைக்கு
அன்பனை வழியனுப்பு.





## ஒப்புதல் வாக்குமூலம்




நான் இரண்டு பெண்பிள்ளைகளைப் பெற்றவன்
அவர்கள் சிறுவயது முதல் ஒவ்வொன்றையும்
பார்த்து பார்த்து செய்தவன்,
உடுப்பு, செருப்பு, சைக்கிள் என
எல்லாம் எல்லாம் ......................
எனக்கு தெரியும்
அவர்களை எப்பிடியெல்லாம் ஆக்க வேண்டும் எண்டு
மனம் நிறைய கனவுகள் சுமப்பவன் நான்,
திருமணத்தையும் நானே முடிவு செய்ய வேண்டும்
அவர்கள் இன்னும் குழந்தைகள் தான் ..........................
சாதி, சமயத்தை மீறி புரட்சி எண்டு சும்மா
கதையெல்லாம் சொல்லக் கூடாது!
நீறுபூத்த நெருப்பாக இன்னும் சாதிப்பாகுபாடு இருக்கிறது.
அதைத்தான் இந்த சமூகம் காலம் காலமாக நெற்றியில்

பூசியிருக்கிறது, அருகே வந்து பார்த்தால் தான் தெரியும்
காதலுக்காக சிந்தப்பட்ட இரத்தத்தை தான்
மங்கல குங்குமாக இட்டிருக்கிறது.
சொல்லலாம் எழுதலாம் சுலபம் ...........................
தனக்கென்று வரும்போது தெரியும்
காதலித்து கலியாணம் முடித்தவர்கள்
ஒரு வருடத்துக்குள் விவகாரத்து கோட்டுப்படியேறினர்
மேலும் நான் காதலித்து கலியாணம் செய்தவன் தான்
அப்போது நாம்பட்ட கஸ்டம் என்மகள்கள் படக்கூடாது.





## இண்டைக்கு போய் நாளைக்கு வா........



பாதை திறந்தாச்சாம்;
பண்டம் பொருளின் விலையெல்லாம் விழுமாம்
ஓமோம் இப்ப எழுப்பத்தில தான் இருக்குது அது!
'இந்த வருசம் எண்டாலும் 'ஓல்சிலோன்' (Allceylon)
ரூர் (Tour) போவன்'
ஒன்பாதாவது படிக்கும் மகள் திட்டம் போட்டாள்,
'லொறியிலை சாமான்களை கொணந்து
யாபாரத்தை பெருக்க வேணும்'
'முகாமில இருக்கிற மூத்த மகனையும் அவன்ர
பெஞ்சாதி பிள்ளைகளையும் பாக்கோனும்'
நானும் பயணம் போகவேணும் அதான் 'DS office' இல
'போம்' (form) எடுத்துக் கொண்டு வாறன்..................
கேட்டியளே! உங்களைத்தான் பாருங்கோ!!
இனும இதை கண்ணும் கருத்துமா நிரப்பி
எங்கட 'G.S' இட்டையும் 'சைன்' வேண்டி
'D.S office' இல 'countersign' வேண்டி
முனை 'சிவில் ஒபிசில' (Civil office) குடுக்கோனும்
குடும்பக்காட் ஜே.ஐ.ஏ, வீட்டுக்கு வாற மைப் (Map)

ஒவ்வொண்டிலையும் நன்நாலு 'கொப்பி' (Copy) அடிச்சு
மினக்கெட்டு இவ்வளவும் செய்தால் 'கிளியரன்ஸ்' (clearangce)!
'சைன்கள் எல்லாம்' ஒரு மாதிரி வேண்டிப் போட்டன்
என்ர கெட்டிதத்னம் கண்டியளே!
'பெரியதுரை இண்டைக்கு 'Meeting' க்குப் போட்டார்;
நாளைக்கு வாங்கோ!
'இன்டைக்கு போயா லீவு, நாளைக்கு ................'
நாளைக்கு நாளைக்கெண்டு - எத்தினை நாளா
நாயா பேயா அலையிறன்? நியாத்தை யாரிட்ட கேக்க?
அண்டைக்கு களத்தில நிராயுத பாணியாய்
நிண்டவனுக்கு ஆரியம் சொன்ன அதே பதில்
'இண்டைக்கு போய் நாளைக்கு வா ................'
எங்கும் எதிரொலிக்க திரும்பி நடக்கிறன்
நாளைக்கும் இனி .....................





## நேற்று இன்று நாளை ............................



நேற்றுவரை
'அவளே உலகம்' என்றிருந்தாய்!
அவளது வார்த்தைகளே
'வேதம்' என்றாய்
மௌனங்களை மொழி பெயர்த்தாய்;
கடைக்கண் பார்வைக்காக
கடும் தவங்கள் புரிந்தாய்!!
கூந்தல் எனும் காட்டில்
தொலைந்து போனாய்!!
இன்று
உன் உலகம் உடைந்து போனது!
ஊமையாய் போனாயடா!!
ஊசியென வந்த வார்த்தைகள்
காற்றடைத்த பையான உன் இதயத்தை
துளைத்தது!!
'காதல் எனும் 'கானல்' – உன்

அன்புக்காக ஏக்கத்தினை
தணிக்காது.

நாளை
வரம் பறிபோனது என்று
வஞ்சியவள் புலம்புவாள்;
நண்பனே அப்போதும் கூட
அவளுக்காக நீ அழுவாய்
மழை விட்டும் போகாத தூவாணமாய் உன் மனம்
வருணப்பாகுபாடற்று
நெடுஞ்சேரலாதன் – நச்செள்ளையாய்
வாழ நினைத்திருந்தாய்
வஞ்சக வண்டுகள் இரைச்சலிட
ஐயுற்று ஐராவதம்
காதல் மாலையை காலால் உழக்கிய போது
இடறுப் பட்டது உன் உயிர்!
சபிக்கப்பட்டது உன் வாழ்வு!!

சிறுபட்டியே!
மனம் எனும் காளையை
மடக்கிப் பிடிக்க முயன்று
மல்லாக்க வீழ்ந்தாய்!!

ஓ .........பீஷ்மனே!
உன் பிரம்மச்சரிய விரதமே
கழிந்தது இங்கு தான்!! – நீ
கங்கையின் மைந்தன் என்பதை – உன்
கண்களா காட்டித்தருவது?!

03.11.2007.





## மனிதம் மலரும் ஆண்டாக!



கடமை முடிந்து
கதிரவன் கடலில் குளிக்கப் போகிறான்
மேகம் திரையிட்டு மறைக்கிறது
பூமாதேவியவள் காலமெனும் புத்தாடையை
கழற்றி மாற்றுகிறாள் என இனியும்
கற்பனைகளை எழுதி
விற்பனை செய்வேனோ?
எரிகின்ற அவலநெருப்பில் குளிர்காய்வேனோ?
குடிக்கிற கஞ்சி கால்வயித்தக் கூட நிரப்பல்லை
குஞ்சுகளை பருந்திடமிருந்து காக்க
தன் இறக்கை விரிக்கும் தாயக்குலம், மாதா மரித்தது கூட தெரியாமல்
முலை சப்பும் முல்லை
மகேசனே! ...... உன்னிடம்
மனதார மண்டியிட்டு தரும் மனு இது
'மனிதம்' எனும் விதை தூவி

பூமி எனும் பூங்காவனம்
புன்னகைப் பூக்களை பிறப்பிக்கட்டும்!!!

'இந்த ஆண்டின் கனவுக்கன்னி யார்?' என
அயல்வீட்டு பத்திரிகைகள் ஆய்வு செய்யும்!
நாமோ சமாதான தேவதைகளை வரவேற்க காத்திருக்கிறோம்!!
மழை வேண்டிப்பிரார்த்திக்கும் பக்தன்
குடையோடு வருவது போல் !!!

01.01.2009.







என் ஞாபக வீணையின்
மீட்டப்படாத தந்திகள் சிலவற்றை
மீட்டுகின்றேன்
பூமிக்கு வந்த ஆரம்ப நாட்களில்
தாலாட்டு உறவு முறையை ஊட்டவும்
வளர்கையில்
கதைகள் சொல்லி
'கண்வளராய் கண்மணியே!' என
கனிவு காட்டவும்
காலம் இடம் தரவில்லை.

எம் கிராமத்தின் மீது
நகரத்தின் சாயல் படிந்துவிட்டது

சுகதுக்கத்தில் பங்கெடுக்கும்
உறவுகள் மிக அரிதாகவே........................
இதயத்தை கழற்றிவிட்டு
இயந்திரமாகிவிட்டேன்!
பகற்பொழுது போதாமல் – சில
இரவுகளும் எனக்கு பகலாகும்
என் பேச்சிலும் மூச்சிலும்
எழுத்திலும் மண் வாசனை
வீசாதது ஏன்?
மரணத்தையாவது
மரபோடு நடாத்து
'மெயில்' அனுப்பியும்
வராத
'மெக்ஸ்சிக்கோவில் இருக்கும்
மகனுக்காக 'வீடியோவில்'
பதிவாக்குவர் இறுதியாத்திரையையும்
படைத்தவனே பதில் சொல்!
ஆக்கச்சுட்டிகளை ஏன்
அபகரித்தாய்?

தமிழ்த்தாயே!
என்னை மறுபடி
கர்ப்பத்தில் சுமந்து கொள்
'கருவில் இருக்கையில்
சங்கீதம் கேட்டால்
குழந்தை
அறிவில் திருவுடையதாகும்' என
மருத்துவம்
மறு மொழி சொல்லும்


உன் சேய்க்காக – ஒரு
தாலாட்டு




பண்பாட்டு தொட்டிலில்
சீராட்டு – என்
உதிரமும் உண்மை
உற்பத்தியாகட்டும்
இவை இன்றேல்
தாயே! உன் மடியில்
முகம் புதைத்து ...........................

(14.11.2008)

## முயற்சியில் சற்றும் மனந்தளராத .......................



நூறு இளைஞர்களை கேட்ட
வீரத்துறவி விவேகானந்தர்
இறுதியில் 'ஓர் இளைஞனாவது ...........................' என
யாசித்ததில் யதார்த்தமுள்ளது.

ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவு
வாடி நிற்கும் கொக்குகளென
வம்பளந்து சந்தியில் நிற்கிறார் வாலிபர்!
முட்டாள்களின் பாசறையில்
விவேக முரசுகள் ஒலிப்பதில்லை!!
கடுக்கண் அணிந்து





காடை போல் தலை வளர்த்து
சின்னவயது 'T' சேட்போட்டு
இறுக்கமான 'டெனிமை' கொழுவி
மோட்டார் சைக்கிளில்
வட்டமடிப்பதோடு முடிகிறது வாழ்வு
பகலிலே மனிதனைத் தேட
விளக்குடன் புறப்பட்டவரே!
திரியினைத் தூண்டி – இலட்சிய
இளைஞர்களை தேடுவோம்
இலக்கியத்தில் இனிவரப்போகும்
தலைமுறை இடைவெளியை நிரப்ப!!
'வேதாளம் முருங்கை மரமேற – தம்
முயற்சியில் சற்றும் மனந்தளராத
விக்கிரமாதித்தன்களாய்'!!!

## பிரம்மனிடம் மனுக்கொடு




சுந்தரமே ! "சுஜி"!!;
உன் புனிதப் புன்னகையால்
என் மனச்சுவரை
'வெள்ளையடித்து விடு'
கன்னக்குழிச் சிரிப்பில்
புதைந்து போனேன்
முத்த்ங்களால்
மோட்சம்
தந்துவிடு
பாதங்களில்
உடல், உளம், ஆன்மா என





மூவுலகங்களையும்
அளந்துவிடு 'வாமனா'!
மழலை மொழி எனும்
'பிரணவப் பொருளை'
எனக்கு ஓது 'சரவணா'!
உன் போல் என்னையும்
குழந்தையாக்க
பிரம்மனிடம் மனுக்கொடு!!
அன்புடன் ஆங்கில போதனையும்
கணனிக் கல்வியும் நாம் தருவோம்
உனக்கு சோறூட்ட
நிலவில் இடம் கேட்போம்.

## மழையும் மனிதமும்



பூமிக்கு வரட்சி நிவாரணம்
வழங்கவே வந்தாய் - ஆனால்
ஓயாமல் குதித்து 'குழப்படி' செய்கிறாய்!
வெள்ள நிவாரணம் வழங்க வேண்டிய
நிர்ப்பந்தம் தற்போது!!
கறுப்புக் கோட்டு தொப்பி குடை என
உன் வருகைக்கு எதிர்ப்புக்கள்
நீயோ யாரையும் பொருட்படுத்துவதாயில்லை!!!
"சொப்பின்" பைகள் - அவர்களது தலையில் மணிமகுடமாய்
வீட்டுப் பாத்திரங்கள்





'ஒழுக்குகள்' வழியாவது இன்று நிறைந்தது!!
"மழைநேரத்து நாயாய்"
மனையிலே தங்க துடித்தது மனம்.
இறுதியில் ஜெயித்தது எஜமானின் உத்தரவுதான்
'கர்ணகுண்டலமாய்' மழைக்கவசமும்
வெண்கொற்றக்குடையும் எதற்கு?
என்னையும் நனைத்துவிடு!!!
கான்கள் நிரம்பிக்காட்டாற்று வெள்ளம் போல
கரைபுரண்டு ஓடுகிறது கடல் மீது கொண்ட காதலால்
கப்பல் விட்டு மகிழும் சின்ன.வ.உ.சிக்கள்
கடும் குளிருக்கு காவலாய் கம்பளி இல்லையா?
நிர்வாணமாய் போனேன் நான்!
தலை வணங்காத மரங்களுக்கு
சிரச்சேதமும், மரணதண்டனையையும்!!
மின்கம்பிகள் மரணப்பொறியாய் தொங்கின!!!
'தொழில் பட்டுது' 'ஸ்கூல் வேளைக்கு விட்டுது'
மாளிகை மழையை ரசிக்கிறது!
குடிசையை வெள்ளம் ருசிக்கிறது!!
வருணனோடு கைகோர்த்த வாயுபகவானே!
போதும் நிறுத்தும் உம் மரண விளையாட்டை!!

**(24.11.2008 இலிருந்து சில நாட்களாக கொட்டிய மழையில் நனைந்தபடியே வடித்த கவிதை)**



அந்தரத்தில்
பறந்து பறந்து
அடியாள்களை
பந்தாடும் நாயகன்,
தாய் தன் மக்களுக்கு
உள்ளாடையை
மறைத்த காலமொன்று இருந்தது
உள்ளாடையோடு உலாவந்து – தமிழை
உளறிவிட்டு போகும் நாயகிகள்
இரட்டை அர்த்தத்தில் பேசுவான்





நகைச்சுவை நடிகன்
வன்முறைக்கலாசாரத்தையும்
வக்கிரபுத்தியையும் தவிர
வலிமையான திரைக்காவியம் ஒன்றை
வழங்க இயலவில்லையே உங்களால்!!
குறிஞ்சிப்பூவாய் மலர்வனவும்
குழிதோண்டிப் புதைக்கப்படும்
கதையோடு சேர்ந்து 'இழுபடும்' கமரா
அர்த்தமேயில்லாத பாடல்கள்
ஆர்ப்பாட்டமான இசையோடு,
கதாநாயகன் மேய்பவனாக
சதா நாயகிகள் மேய்ச்சல் நிலமாவர்
தேகத்தை சுற்றிச்சுழல்பவர்களே
அகத்தை மாற்றும் சக்தியில்லையே!
வெற்றி என்பது வசூலைப் பொறுத்தது.
தரமான தயாரிப்பும்
நாயக விம்பத்துள்
நசுங்கிப் போகும் – உம்
'சீனி, மா' வைத்தின்று தின்று வந்த வருத்தம்
'மந்தம்'
சுயசிந்தனை இல்லாதவரை – மாட்டிய
சகதிக்குள் இருந்து மீள இயலாதே!

(03.02.2009)

# அவல அடைகாப்பு



தடைகள் பல தாண்டிய பின்னர்
'A-9' இல் பிரயாணம்
வாசிப்பதற்கு எடுத்துச்சென்ற புத்தகங்களுள்
நுழைய முயற்சித்தும் முடியவில்லை
விரிந்து கிடக்கும் பிரபஞ்ச புத்தகம்
என்னை அழைக்கிறது.
சாளரங்கள் வழியே துளாவுகிறேன்.

தலைவெட்டப்பட்ட தென்னைகளும் பனைகளும்
புதர் மண்டிய நிலங்கள்
வேரோடு சாய்ந்த பெருமரங்கள்
மனிதர் வாழ்ந்த சுவடுகளே அற்றதெருக்கள்
மதில் மட்டுமே கொண்ட மனைகள்
திடீரென முளைத்த புத்தபெருமானின் சிலைகள்.......

உயிர்களை இழந்தோம்





உறவுகளை தொலைத்தோம்
இழப்பதற்கு இனி ஒன்றமில்லை எனும்
அளவுக்கு இழந்தோம்.

சூனியமானது வாழ்வு
பூச்சியம் ஆகிவிட்டோம் - ஆனால்
பூச்சியத்திலிருந்து தான் எல்லாம் ஆரம்பம் என்பதை
மறந்து விடாதே தோழா!

தோப்பிழந்து போன குயில்
காப்பிழந்து போன நிலையை எண்ணி பாடும் பாடல்...............

ஆலமரமாய் அகண்டு விரிந்த வாழ்வை
அங்குல அடிசாடிக்குள் நட்டுவிட்ட வித்தை
'பொன்சாய்' எனும் கலை
அரசியலின் ஈன வலை தான்

நீ பட்ட துன்பமில்லை
அவன்பட்ட துன்பமுமில்லை
நாம் பட்ட துன்பம் - ஆம்
முன்னிலை , படர்க்கை எனும்
மூவிடப் பேதம் கடந்து
தன்மையாய் தகிக்கின்ற துன்பம்!!

முட்கம்பி வேலிக்குள் முடிந்தது வாழ்வு என
முழு உலகையும் நம்ப வைக்கிறார்
ஒருவேளை கஞ்சிக்கும் கையேந்தும் நிலை
ஒட்டுத்துணியையும் அம்பலத்தில் மாற்றும் அவலம்

இத்தகைய சிறை வாழ்க்கை எமக்கும் புதிதல்ல
திறந்த வெளிச்சிறைச்சாலை தானே 'யாழ்' எனும் பாலை!
ஆலையிட்ட கரும்பாய் அவலிக்கிறோம்.

மண்ணிலே விழுந்து, அழுந்தி
உழக்குபட்டு சுடப்பட்டு வந்து நிற்கும் நாம்
பண்பட்ட மட்பாண்டம் போல,
நிறைய நிறைய நம்முள் தேக்குவோம்.
நம்பிக்கை எனும் நன்நீரை!!

வேரோடு பாறிய மரங்களிலும் பசியதுளிர்ப்பை கண்டேன்
கருகிய புற்களும் கார்காலத்தில் தலை தூக்கும்
வீதியோரப் பூவரச மரங்கள் பூத்துக்குலுங்குகின்றன
நம்மில் ஒன்றான கால்நடைகளின் மடிகள் நிறைகின்றன
நாளை தூய பாலை பொழிவதற்காக
வசந்த காலத்திற்கான கட்டியம் காதுகளில் விழுகிறது.

அவல அடைகாப்புக்குள் - நாளைய
ஆனந்தத்தின் பாடலை பாடியபடி
ஆற்றுவோம் ஆக வேண்டியவைகளை.





## நான் ஆம்பிளைப்பிள்ளை!



'பணம் மட்டுமே வாழ்க்கையாகாது
பணமின்றி வாழ்க்கையும் ஓடாது' எனும்
பரிபக்குவத்தோடு பகல் முழுக்க
பம்பரமாய் சுழல்பவன் நான்!
'உணர்ச்சிகளுக்கு வடிகால் அழுகை' என்று
உளவியல் உரைக்கிறது;
இதயத்தில் சுடரும் இலட்சிய நெருப்பால் - என்
கண்ணீரும் ஆவியாய் போனது
ஆம்பிள்ளை அம்பலத்தில் அழுதால் அசிங்கமாமே! - நான்
அழுவதென்டால் இருட்டில் தான் அழவேண்டும்
அல்லது அறைக்கு இரட்டை தாழ்ப்பாள் இட்டுவிட்டு
அழவேண்டும் !!
ஏனென்டால் நான் ஆம்பிளைப்பிள்ளை!!!

தாயிற்சிறந்த தயவான தத்துவன் தாயுமானவன் எனும்
பதவிகளுக்கு 'சேவை நீடிப்பு' கேட்கிறேன்!!
மனமெனும் பாறை இறுகி இறுகி
ஈற்றிலே வெடித்து பிரவகிக்கும் கண்ணீர்
'நான் இன்னமும் மனிதன் தான்' என
சங்கீதமாய் சலசலத்து ஓடட்டும்!!!

# தமிழன்னைக்கு கடன்காரன் யான்



இரவின் 'முதற்கட்டம் '
நட்சத்திரப் பட்டாளத்தை
'வானத்து விதானையார்' அம்புலிமாமா
கணக்கெடுக்கும் நேரம்
நாள் முழுக்க நாடகப்பட்டறையில்
ஆடிவிட்டு ஆசான் ஆற அமருகையில்
சம்பாஷணை ஆரம்பிக்கும்
அடைய வேண்டிய இலக்குகளும்






அறிமுகம் செய்த இலக்கிய உறவுகளும்
எத்தனை ..................? எத்தனை ?
இடையிடையே நிலவும் மௌனத்தை
வேப்பமரம் தலையசைத்து
ஆமோதிக்கும்
கடிகாரமுள் கண்ணில் குத்த
வெளிச்சத்திற்கு 'ஜென்ம விரோதியாகி
தாரோடு தாம்பத்தியம்' முறித்து
தனித்துப் போன தெருவில்
மிடுக்கோடு நடைபோடுவேன்,
தவணை முறையில் மின்மினிகள்
விளக்கேந்தும்,
இருட்டில் தலைகாட்டும்
தமிழன்னையின் கடன்காரன் யான் ........................

(04.03.2009)

## பிரசவம்



மனதின் அடி ஆழத்திலே எப்போதோ புதைந்த வித்து;
நினைவோடைகளில் பிறர் அவலம் கண்டு
அல்லது நான் அவலிக்கையில் விழியோரம் சுரக்கும்
ஈரத்தோடு பதியமாகி முளைவிடும் கவிதை;
நல்ல நூலோடு கட்டுண்டு விடுபட்ட கணங்களில்
இயற்கையோடு மனது ஒன்றித்த தருணங்களில்
இசையோடு இணைந்து உலக அசைவுகளை
மறந்து சஞ்சரிக்கின்ற பொழுதுகளில்
உருவாகிறது கருவாகிறது கவிதை!!

கீழ்மைகள் கண்டு கொதிப்படைந்து
மனதின் கங்குகளில் மூள்கின்ற தீ
உந்த உந்த பேனா தன் உதிரத்தை
சிந்த சிந்த சிருஷ்டியாகிறது கவிதை!!!





கவிதையை பிரசவித்த நிலையில் மனமானது
பருவ காலங்களில் அடைமழை கொட்டித் தீர்த்தபின்
நிலவுகின்ற அமைதிபோல் இருக்கும்!
சாதாரணமாய் இப்படிச் சொல்லலாம் - ஆனால்
சுவை ஒன்றை சுவைத்தே உணரமுடியும் - இந்த
தூய்மையான தாய்மை உணர்வும் அவ்வாறு தான்!!.

## பரிசோதனைக்குழாய் குழந்தை!

'நாட்டு நிலவரம் இது தான்
மண்ணை ஆண்ட மாமன்னர்களே!
வரையாது வாரி வழங்கும் வள்ளல்களே!!
காலக் கூண்டில் குற்றவாளியாக நின்று
பதில்களைப் பகிர
கட்டளை விடுக்கிறேன்!

புறாவுக்காக உம் தசையை ஈய்ந்த சிபியே!
வெண்புறா சாகக்கிடக்கிறதே
என் செய்வீர்?

முல்லைக்கு தேர் கொடுத்த பாரியே! - எம்
மக்கள் வசிக்கும் ஒழுகின்ற குடிசைக்கு வேய ஓலை கொடு
மயிலுக்கு தோகை கொடுத்த பேகனே!
அம்மணமாயுள்ளவர்களுக்கு ஆடை கொடு!!
பசுவின் கண்ணீர் கண்டு பதறி
புத்திரனை தேர்க்காலில் இட்டவனே!
பச்சிளம் பாலகர்கள் உடலமாய் வீதியிலே!!


சிலம்பின் பரல் தெறிக்க
சீவனை விடுத்தவனே!
வளையல்களும் அறுபடுகிறதே!!
தம்பிக்கு தலை கொடுத்த அண்ணனே!
யார் தலையை முதலில் கொய்வது என
சோதரர்கள் போரிடுகின்றனரே!!

உம்மீதான குற்றச்சாட்டு
இந்திரியங்கள் இம்மியளவேனும்
சேகரிக்கவில்லை சந்ததி வாழ
தீர்ப்பு
உடன் தேவை உம் மூலம் பரிசோதனைக்குழாய் குழந்தை!!





## எழுத்தும் செயலும் சேரும்புள்ளியில்



விரிந்து பரந்து கிடக்கும்
வெள்ளைத்தாளில் பேனா முனையோடு
ஏனிந்த ஏகாந்த யுத்தம்?

புத்தகங்களை பெருக்கி
வியாபாரம் செய்யவா?
'இருபது வயதிற்குள் கவிஞனாகியே
தீர்பவன் உயர்ந்தவன் ' எனும்
ஆங்கிலேய தேசத்து அவசரமா?
இல்லை, இல்லவே இல்லை.


வாழும் காலத்தை
வரலாற்றில் வடித்திட வேண்டும்;
அவலப்படும் நெஞ்சங்களுக்கு
ஆறுதலாய் சில வார்த்தைகள்;
கனவு மூட்டைகளின்
சாயத்தை போக்குதல்;
'கவிதை' என்பதும் 'கவிஞன்' என்போனும்
புத்தகத்தோடு புதைந்தவர்களா?

மானுட இனத்தின் ஓர் குரல் தான்!
அந்நியமான பொருள் அல்லவே!!
கவிதைப்பாடுபொருளின் பங்குதாரர்கள் அல்லவா நீங்கள்!
உரிய உன்னதங்களை காதில் விழுத்தி
ஊத்தைகளை வாதில் கொளுத்தி
தொடர்கிறது கவிப்பயணம்!
கவிதைப் படைப்பு ஒவ்வொன்றும்
தாய்மையின் நிறைவை தருகிறது
இச்சுகம் தவிர்த்து இந்திரலோகத்தை ஆண்டுமென்ன?
'பேனா' எனும் ஏர் முனை கொண்டு
வருவேன் உழாப் புலங்களையும் உழுது பயிரிட.





## தோழா வா!!



வீழ்ந்த விதை
விருட்சமாக எழுகின்றது
நீரின் வீழ்ச்சி
மின்சாரமாகின்றது
மழையின் வீழ்ச்சி
மரகதப் பசுமையை தருகின்றது
தோழனே!
நீ மட்டும் வீழ்ந்தாய்
எழவேயில்லை !!
நாம் கடந்து செல்ல வேண்டிய
வாழ்க்கைப் பாதை
இன்னும் நீளமாய் ....................................
இங்கு உன் இருப்பை
அர்த்தமுள்ளதாக்க வா!!

(09.10.2008)

# நான்



நான் யார்?
'சுதர்சன் ' எனும் சுட்டுப்பொருளா?
இந்த தேகமா, மனமா?
அல்லது இரண்டுமா?

யாரேனும் சொல்லுங்கள்
யோசித்துப்பார்த்தேன் , தெளியவில்லை
யாசிக்கிறேன்
நான் யார்?

'நானென்று ஓர் பொருளே இல்லை
ஏது நிகழினும்
நமக்கென்று இரு' என்றாயே
எட்டயபுரத்து சிட்டுக்குருவியே





சிறியோனின் சிந்தனைக்கு
எட்டவில்லையே உம் கருத்து.

'நானென்று சொன்னாலே
நானலல் நீ தான்'
காதலின் போதையில்
காதலன் உளறுகிறான்

தெருவில் வரும் வைக்கோல் ஏற்றிய
மாட்டு வண்டியை காண்கிறேன்
வைக்கோல்கள் மரக்கிளைகளில் பொறியா நான்?
தொங்குவதை - இது போல்
என் ஆத்மாவும் மானுட உறவு - எனும்
கிளைஞரோடு தங்கி
போமிடத்தை தவறிடுமோ?
காட்டு மூங்கிலாய் நிற்கிறேனே
கனன்று எரியும் ஞானத்தீ
என் அகம் எனும் காட்டை எரித்து
புல்லாங்குழலாய் ஆக்காதா?
நான் என்பது திரவமா?
அல்லது திண்மமா?
வாயுவா?
எதுதான் 'நான்' எனும் பொருள்
'நான்' செத்த பிறகு தான் அறிய முடியுமா?


மானுட சமுத்திரத்தில் நானும்
ஓர் துளி தானா? - என்
நதி மூலம் எது?
நான் யார்?
நான் யார்?......................
நான் ...............................!
உயிரும் மெய்யுமா நான்

மெய் என்பதே பெரும்பொய் அல்லவா!
நான் யார்?
நான்................................................
...................................................
பிரபஞ்சமெனும்
பெருவெளியின் . ஒரு புள்ளியா?
தெய்விகப் பெருநெருப்பின்
சிறு பொறியா நான்?





## உன்னளவில் வழிப்போக்கன்



சோதரி!
உன் மனமெனும் வெள்ளைத்தாளை
என்னுள் உறங்கிக்கொண்டிருந்த மிருகம்
கசக்கி எறிந்து விட்டதோ?
என் முரட்டுப்பிடிவாதத்தால் வாழ்வெனும் கோப்பை
நொறுங்கி உயிர் கண்ணீராய் ஒழுகுகின்றது!
நீ மலர்
நான் முள்
பிரிவு என் மீதே சவுக்கைச் சுழற்றட்டும் - மேலும்
சிலுவைகள் எனக்கொன்றும் புதிதல்லவே!
என்னை அலட்சியப்படுத்திவிட்டாய் என்பதற்காக
கொண்ட கோபமல்ல,
காலத்தை நீ அலட்சியப்படுத்துகிறாய் அதற்காகவே
வெளியீட்டுக்கு நீ வரவில்லை என்பதற்காகவும் அல்ல
வெளியீடுகளின் பின்னால் உள்ள வலியை மறக்கிறாய் என்பதால்
'மன்னிப்பு' என்பதும் 'நன்றி' என்பதும்
'சம்பிரதாயம்' எனும் கோப்புக்குள் வந்த வார்த்தைகள் ஆதலால்
இவற்றை நான் உன்னிடத்தில் உபயோகித்ததில்லை.
மேலும் நாம் அந்நியர்களல்லவே - ஆனால் இப்போது
வாழ்வை விட்டு அந்நியப்படுகிறேன் போல் உணர்கிறேன்

என்னை நானே மன்னிக்க இயலாமல் திணறுகின்றேன்
ரணத்தை ஆற்ற காலமா? நீயா? மருந்தா போகிறீர்கள்
மனத்தை தேற்ற இயலாமல் மரணம்
விருந்தாய் என்னை பரிமாற முன்பு!!
உன்னளவில் வழிப்போக்கனானாலும்
என்னளவில் எள்ளளவும் மாற்றமில்லை நீ சோதரி என்பதில்






# அழகிய விபத்து



அன்பே!
உன் உதட்டுச்சாயம் போல் துடைத்துவிட்டாய் என்னை
கூந்தலில் சூடி உதிர்ந்த பூ போல் உதறிவிட்டாய்!
ஏன் இந்த நெடு மௌனம் என்றாய்?
நான் என்ன சொல்ல? மொழிகளை நீ களவாடிய பிறகு!!
ஆனால் பெண்ணே! கண்ணே!!
உதட்டிலிருந்து உதிர்ந்து போகின்ற வார்த்தையின் வெளிப்பாட்டிற்கும்
உணர்வின் உந்துதலால் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மலர்கின்ற
வார்த்தைக்கும் வேறுபாடு உள்ளது
வாழ்க்கைப்பாதை ஒன்றும் மலர்ப்படுக்கையல்ல,
கல்லும் முள்ளும் நிறைந்த காரிருள் சூழ் பாதை என்பதை
காலம் உணர்த்தட்டும் - சிறு காற்றின் அசைவிலே
மரத்திலிருந்து உதிர்ந்த இலை போல ஆனாய் நீ,
நினைவுகள் சருகுகளாக என் மனமுற்றத்தில்
சரசரக்கின்றன, ஆதலால் அதை புதைத்தேன்
உரமாகட்டும் எனும் ஆக்கசிந்தனையோடு
ஓ--------- அன்பே .அது ஒரு மிக மிக
அழகிய விபத்து விழிகள் மோதி காயம்பட்டோம்
காயத்திற்கு மருந்தாகும் என காதலை நினைத்தேன்
'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவாய்' என கனவு கூட காணவில்லையே!
காதல் ஒரு மந்திரச்சாவி தான் - என் இதயத்தின்
திறவாத பெருங்கதவை அல்லவா திறந்து விட்டது!
காதல் ஒரு மந்திரித்த கயிறுதான் - உலகப்பம்பரத்தை
சுற்ற வைக்கின்றதே!!

# அந்த காற்சட்டை நாட்கள்........................



நல்ல விசையோடு ஓங்கி விளாசப்பட்ட பந்துபோல
என்மனம் சுழல்கிறது
அந்த காற்சட்டை நாட்கள்
ஆளுக்கு அஞ்சு ரூபாப்போட்டு பந்தை வாங்கினோம்
எங்கட 'ரீம்' (Team) அண்ணன்மாரிட்டை 'பற்' (bat)
விக்கெட் (wicket) வேண்டி கோயில் வீதியிலை
விளையாடுவம்
வெயில் குளித்தும், மழைக்குள்ள தோய்ஞ்சும் வீட்டுல
'ஏச்சு' வேண்டினம்.
சிறுகச் சிறுகச் சேர்த்து வைச்ச காசில 'ரூனமன்ட்' நடத்தினம்
அப்ப எங்களுக்கு 'கிரிக்கெட்' (Criket) தான் உலகம்.
'மச்சில' (Match) வெல்லுறதுக்காக ஆக்ரோசமா
விளையாடுவோம்
வென்டால் கொக்கலோ சோடா தொடக்கம்
'சம்பியன்' கப் (Champian cup)
பரிசா கிடைக்கும் ................................. ஒவ்வொருவராக
மூண்டு மாதத்துக்கு ஒருக்கால் தலைவர் பொறுப்பேற்ற
சுழற்சி முறை நிர்வாகம் எங்களது .................
விக்கெட் விழுந்தவுடனே போலரை (bollewer)
தட்டிக் கொடுக்கிறதும்
எங்கட ஆக்கள் 'சிக்ஸ்' (six) அடிக்க விசில் அடிக்கிறதுமான





பொழுதுகள் போயின ........................

அப்ப எங்களுக்கு கிரிக்கெட் தான் உலகம் .........................
வட்ட வடிவமான மைதானம்
வாழ்க்கை ஒரு வட்டம் என்பதை சுட்டுகிறது, வெற்றி - தோல்வி
இன்ப துன்பம் சுழல் சக்கரம்
வியர்வையில் நீராடுவாய்
இரத்த ஓட்டம் சீராகும்
மைதானம் ஒரு மருத்துவமனை
மைதானம் ஒரு பள்ளிக்கூடம்
அப்ப எங்களுக்கு கிரிக்கெட் தான் உலகம்.............

*(விவேகானந்த அணியின் கழக ஒழுங்கமைப்பு பொதுக் கூட்டம் மிக நீண்ட கால இடைவெளியின் பின் நடைபெற்ற போது மீண்டு வந்த பழைய நினைவுகள் 13.09.2009)*

## 'பெண்மை வாழ்க ..............................'




மேடையில் முழக்கம்
'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோம் ..............................?
கரகோஷங்கள் விண்ணை எட்டுமுன் – இவர்
மனையாளோ மகுடிக்கு அடங்கும் பாம்பாக!

சீவியத்திற்காய்
சிலம்பை அடகு வைத்த கண்ணகிகள்
வயிற்றில் தீ மூட்டுவர்!

கனவிலேயாவது
கண்ணனைக் கண்டு
கலியாணமாகும் கன்னிகள் பலர்!





அடர்ந்த கானகத்தே
நளனை தவறவிட்ட
தமயந்திகள் சிலர்!!

அலுவலகப் பணிபுரிபவர்கள்
கணவனுக்கு தம் கற்பை
நிரூபிக்க
நித்தமும் தீக்களிக்கும் சீதைகளாய்........................
அபிமன்யுவை இழந்த சுபத்திரைகளாய்
அவலத்தில் அழுந்தும் அன்னையர் கதை
தொடர்கிறது முடிவின்றி
பெண்ணிய வாதிகள்
மேடையில் முழங்குவர்
'பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோம் ........................'
-----------------------------------
-----------------------------------

அர்த்தநாரீஸ்வரருக்கு
அர்த்தம் புரியாதவர்
படிப்பது சிவபுராணம்
இடிப்பது சிவன் கோவிலாக
இப்சனே!
நோறாக்களை படைத்துவிடு
பொம்மைகளாய் பெண்களை
நினைத்து ஆட்டுவிப்போர் பலர் ..............................

இந்த ஊர்வலங்கள்
வெற்று கோஷங்களிலிருந்து
விலகி நடக்கிறேன்
யதார்த்தத்தை நோக்கி

(08.03.2009)

ஓம் சாயிராம்

# எங்கள் புட்பக விமானம்!!



"இல்லை ---- இல்லை அப்படி இருக்காது'
ஏற்க மனசு மறுக்கிறது
'எங்கட சைக்கிளை காணேல்லை' – அது
சைக்கிளில்லை எம் குடும்ப நண்பன்
தந்தையின் 'அட்வான்ஸ்லெவல்' வகுப்புக்காலமதில்
தோழனாக அறிமுகமானாய்
கற்பகதருவாம் பனையின் பல வளங்களையும்
கச்சிதமாய் காவினாய்
காவோலைகளை கட்டிவருகையில்
காற்றில் மிதக்கும் புட்பகவிமானமாய்
காட்சி தருவாய் !! – உன்னாலே





குபேரன் என இறுமாந்திருந்தோம்
இடப்பெயர்வுகளின் போதும்
சிவனாரின் இடபம் போல
இணைபிரியாதிருந்தாய்!
எனது சைக்கிள் 'வெள்ளோட்டமும்' உன் மீதானே
எம் தெருவின் தேரே!
எமைப்பிரிய எப்படி மனம் வந்தது?
மனமேயில்லாதவர்களின் கைவரிசை இது
நீ என்றுமே எம் மனத்தரிப்பிடத்தில்
நிரந்தரமாய் ........................
மனுநீதியின் மாளிகை வாயில்
ஆராய்ச்சி மணியாய் எங்கும் அதிர்வலைகள்
உன் வருகையை அறிவிக்கிறது!
மீண்டும் வருகிறாய் !! – நீ
மீண்டும் வருகிறாய்!!!
தர்மச்சக்கரமாய் சில்லுகள் சுழல.

(01.01.2008)

## 'எங்களுக்கும் கனவுண்டு'



நிறப்பாகுபாட்டு வெறியர்களே!
'பராக் பராக்' விலத்துங்கள்'
''ஒபாமா வருகிறார்!
மாளிகை இனித்தான் 'வெள்ளை' ஆகும்!!
ஆசனத்தில் அமர்ந்ததும்
அசுரகுணம் பீடிக்குமோ? அல்லது
அமைதி குடிகொள்ளுமோ?
சரிந்த பொருளாதாரத்திற்கு
முண்டு கொடுப்பது யார்?
சவால்கள் ஏராளம்





மூத்த தோழனே!
மாட்டின் லூதர்கிங்!!
உமக்கு மட்டுமல்ல 'எங்களுக்கும் கனவுண்டு'.
கந்தகக் கலப்பில்லாத காற்று – சதைதின்னும்
கழுகுகள் பறக்காத வானம்
துப்பாக்கி முனைகளிலும்
மலர் பூத்த பொழுதுகள் என நீளும்!!! – ஆனால்
ஏவுகணைகள் தொகையாய் வினைசெய்யும்
இலக்கணமும் இங்கு பொய்யாகும் என்பதை
பிலாக்கணம் பின்னெழுந்து பறை சாற்றும்
யார் வெல்வது எனும் போட்டியில்
மண்டியிட்டு மரணிப்பது மனிதம் தானே!!
ஆழமான நதியை அகத்தே கொண்டதால்
ஆணவம் கொள்ளாதே அமெரிக்காவே! – எம்
கண்ணீர்ப்பிரவாகத்தை விட உந்த ஆழம் குறைவு!!
நயகராவில் சொட்ட சொட்ட நனைபவர் நீங்கள்
நித்தமும் குருதியில் குளிப்பவர் நாங்கள்!
எம் கல்லறைகள் மீதிருந்து
'மனித உரிமைகள் ' உமை உலகமே
நாளை நீ பேசுவாய் !!.

## மனிதன் என்னும் காரணத்தால்



உலக அரங்கில் உன் பெயர் உச்சரிக்கப்படுகிறது.
A.R.ரஹ்மான், இசைப்புயல் உம்மை
நானும் வாழ்த்துவேன்
ஒஸ்கார் விருதினை வென்றுவிட்டீர் என்பதற்காகவா?
இல்லை............. மனிதன் என்பதை நிரூபித்தற்காகவே
'எம்மவர்கள் இலங்கையில் அல்லற்படுகின்றனர்
ஆதலால் பாராட்டு விழாக்களை தவிர்த்தேன்'
என்று சொன்னதால் உம்மீது நேசம் பிறந்தது,
விருது பெற்ற வேளையிலும் தமிழில்
சில வார்த்தைகள் இறைவனுக்கு நன்றி கூறியதாலும்.
இசை எனம் போதையால் உலகை ஆண்ட மைக்கல் ஜாக்கசன்
எனும் பெரும் கலைஞன் போதையால் கட்டுண்டு மரணித்தற்கு
அஞ்சலி இவ்வாறு மனிதத்தை வெளிப்படுத்தியதால்
வாழ்த்துகின்றோம். நாம்.





## *உலகப்படிப்பு*



மரத்தின் வேரினது உழைப்பை
மலரை பறிக்கையில்
நன்றியோடு
நான் நினைப்பேன்
தாகத்தில் தவிக்கையிலே
தண்ணீரின் தயாள குணம்புரியும்
இருட்டில் இடர்படுகையிலே
வெளிச்சத்தின் தேவை புலனாகும்
இயற்கையின் படைப்பு யாவும்
இல்லாத போது தெரியும் அருமை
கல்வி என்பது ஏலவே
புதைந்திருக்கும் பரிபூரணத்தை
வெளிக்கொணர்வது தானே
பிரபஞ்சம் பகர்கின்ற பாடங்களை
படிக்கவா மானிடா!
மனதுள் 'மண்டிக்கிடக்கும்'
மகிழ்ச்சி வசமாகும்.

## ஒரு முகம்

எனக்கு நன்கு அறிமுகமான முகம்
அருளின் மொத்த வடிவமும் துலங்குகின்ற அழகான முகம்
உவகையின் உருவம்
என்றைக்கும் பிரகாசமானதும்
முழுமையாக இருளற்றதுமான - அது
தருகின்ற ஒளி இயல்பான மகிழ்ச்சியை தருகிறது
அதனை பார்ப்பதால் நான் கொடுத்து வைத்தவன்
ஆனால் என்னிடமுள்ளது வேறுசிலரிடம் மட்டுமுள்ளது
இது அழகான என் தாயினுடைய முகம்.






## உயரிய சிந்தனைகள்

நற்சிந்தனைகள் செய்யப்படுகின்றன
எப்போதெனில் மனிதனும் உயரிய சிகரங்களும் சந்திக்கையில்
இது செய்யப்படவில்லை,
வீதிகளில் முட்டி மோதும் போது.

# பிரிவுத்துயர்



எப்போது அவள் என்னை விட்டு நீங்கினாளோ
பின்பு மதிய உணவு, நான் வாசித்துக் கொண்டிருந்த பொழுது
நான் உடனடியாக வேண்டியது
மீண்டும் காண்பதற்காக.
நான் கண்டேன் பாதி சாப்பிடப்பட்ட
சாண்டவிச்,
முட்டைகோஸ், இறைச்சி கலந்த உணவு.
இவை அனைத்தும் அவள் கடித்த மீதியின் வடிவமாக.






# எனது உருவப்படம்

நான் ஒவ்வொன்றையும் ஒத்திருக்க / ஒப்பிடப்பார்த்தேன்
ஆனால் சில நேரங்களில் என்னை காண
கடையில், சாளரத்தில்
சட்டங்களின் பார்வையை நன்கு அறிந்திருந்தபோதிலும்,
உருவப்படம் புதுமையானதாக
திகதி தெரியாததாக,
அடிக்கடி பக்கத்தில் பிரகாசிக்கும்
எனது தந்தையின் படத்தில்....................

## இறுதி யாத்திரை



எனது வாழ்க்கை எனும் மாலையை தொடு என் இறையே!
அப்பொழுது நான் புறப்படுவதற்குத்தயாராகிவிடுவேன்
ஒரு சிறு பார்வை பட்டவுடன் குதிரை கிளம்பிவிடும்
உடனே அந்த யாத்திரைக்கு
என்னை உறுதியான பக்கத்தில் வையுங்கள்
ஆதலால் நான் ஒருபோதும் வீழாதிருப்பேன்
நாம் தீர்ப்பினை ஏற்று சவாரி செய்ய வேண்டும்
அத்துடன் அதன் பகுதியான மலைச்சரிவை நோக்கி
ஆனால் நான் ஒரு போதும் பாலங்களை கருத்தில்
எடுக்கவில்லை அத்துடன் கடல்களையும் தான்
இறுதி ஓட்டம் வேகமாக நடாத்தப்படும் போது
எனது சொந்த (சுய) தெரிவு நீயே (இறைவா)
விடை கொடு என் வாழ்க்கைக்கு நான் வாழப்பயப்பட்டேன்
அத்தோடு உலகை அறிந்து பயன்பட்வும் தான்
மலைகளை முத்தமிடுகிறேன் ஒரு தடவை
இப்பொழுது நான் புறப்படத் தயார்.





## A face

I know a face,
a lovely face
as full of beauty as of Grace
a face of plesure,
ecer bright,
in utter darkness it
gives us light a face that is it self like joy
to have seen it i'm lucky boy, but I'veajoy
that have a tew other this lovely women
Is my mother

***E.W.Tennant.***

## Great Things

Great things are done
when men and mountains meet
This is not done
by josstling in the street.

***-Villiam Blake.***

## Still Life

When she leftme
after while.
But I suddenly wanted
to look again
and I saw the half - eaten
Sandwich,
bread,
lettuce and salami
all carryying the shape
of her bite.

## Self - Portrait

I resmble everyyone
but my self, and sometimes see
in shop - windows.
despite the well - known laws
of optics,
the portait of a stranger
date unknown,
often signed in a corner
by my father





Emily Dickinson

Tie the strings to my life my lord.
then I am ready to go
Just alook at the horses
Rapid that will do
Putme in on the Firmest side
So I shall never fall
For we mustride to the judgment
and it's partly down hill.
But never I mind the bridges
and never I mind thesea
Held fastin everlasting race
By my own choice and thee
Gord-by e to the life I used to live
and the world I Used toknow
And kiss the hills forme just once
Now I am ready to go.

'சமூகச் சிந்தனையும் தன்னம்பிக்கையும் அகத்தேடலும் உங்கள் கவிதையின் அடி நாதமாக
ஒலிப்பதை அனுபவித்தேன். சில கவிதை வரிகள் நெஞ்சில் நிற்கின்றன.
உதாரணமாக
"நான் முகம் பார்க்கும்
சமூகக் கண்ணாடி"
"சிறகுகளை விற்றுவிட்டு
பறக்க ஆசை கொள்கிறாய்............"
இவை சில எடுத்துக்காட்டுக்கள்
நம்பிக்கையுடன் எழுதுங்கள்

***கலாபூசணம் தெணியான்.***

'பொதுவில் உங்களிடம் ஆற்றல் இருப்பது இந்நூலின் மூலம் தெரிகிறது. கவிதை தொடர்பாக தொடர்ந்து வாசியுங்கள், மொழி பெயர்ப்பு கவிதைகளைப் படிப்பது மிக அவசியம். அவை உங்கள் அனுபவத்தை மேலும் அகலிக்கும். முயன்று வளர வாழ்த்துக்கள் .

**திரு.அ.யேசுராசா , யாழ்ப்பாணம்**

ஈழத்துக் கவிதையுலகில் தங்களின் வரவு நல்வரவாகுக. இந்த வயதில் எழுதும் கவிஞர்களில் தாங்கள் வித்தியாசப்பட்ட நிற்பது கவிதைகளை படித்த போது புரிந்தது. பல கவிதைகள் அருமையாக வந்துள்ளன. 'என்னை வழி நடத்தும்'., 'மனமாற்றம்', 'என்னோடு நான்', 'மௌனமொழி', 'சிற்பிகள் சிறைக்குள்', மௌனமே வாழ்வாக' என்பன காணப்படுகின்றன. அடுத்த அடுத்த படிமுறை வளர்ச்சியில் இன்னும் தங்களிடம் எதிர்பார்ப்புக்கள். மேலும் தமிழக்கவிதையின் உயிர் நாடியான யாப்பு பற்றிய அடிப்படை அறிவு அவசிய மானது. கவி உள்ளுணர்வு உள்ளோருக்கு யாப்பு தடைபோடாது தடவிக் கொடுக்கும். முயன்றறிக. நவீன கவிதையின நுட்பங்கள் உத்திகள் கவிதையின் ஆழத்தை அகலிக்கும் தெரிந்துணர்க.

வாழ்க வளர்க.





'மௌனமே வாழ்வாக கவிதைத் தொகுதி கிடைத்தது வாசித்தேன், ரசித்தேன் எல்லா கவிதைகளும் சிறப்பாக இருந்தது. சில கவிதைகள் நிகழ்காலத்தை கண்முன் நிழலாட வைத்தன. என்னுரையில் நீங்கள் கொடுத்த அந்தவரிகள் மிகவும் சிறப்பாக இருந்தது. உங்கள் கவிப்பயணம் தொடர எங்கள் வாழ்த்துக்கள் சமூக முற்போக்குச் சிந்தனைகளை தட்டிஎழுப்பும் கவிதைகளை எழுதிச்சிறந்த கவிஞனாக மிளிர்க.

**திரு.கா.தர்மலிங்கம், திருமதி.த.பவானி**
**கனடா.**

'எமது இன்றைய இறுக்கமான வாழ்வியலை தனது புதுக்கவிதையில் நெருக்கமாகப் பயன்படுத்தியிருக்கிறார்.'

***'புத்தகசாலை'***
***உதயன் 28.02.2009***

"நான் சேற்றினருகே நின்றாலும்
செந்தாமரை மலராதா.
கிழக்கில் ஒரு ஒளி சுடராதா என
காத்திருக்கிறேன்."

தொகுப்பில் இடம்பெற்ற கவிதையொன்றின் வரிகள் இவை. க.பொ.த.உயர்தரப் பரீட்சை எழுதிய கையோடு வெளியிட்டிருக்கும் .இந் நூலில் குறுங்கவிதைகள் உள்ளடங்கலாக மொத்தம் 22 கவிதைகள் உள்ளன.

"இளம் பராயத்தவராய் இருப்பினும் சுதர்சனின் இளநெஞ்சில் சமூக அநீதிகள், அடக்குமுறைகள், இழிநிலைகள் தொடர்பில் ஆவேச உணர்வு மேலோங்கி நிற்பதும் வாசகர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் சொற்பதங்கள் கையாளப்பட்டிருப்பதும் அவரின் அசாதாரண ஆளுமைக்கு ஆதராமாகின்றன." என யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.வை.சுந்தரேசன் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.

(நீங்களும் எழுதலாம் - பங்குனி -சித்திரை-2009)

மாணவ எழுத்தாளனான க.சுதர்சனின் உள்ளத்தில் ஊற்றெடுத்த 21 கவிவரிகளின் தொகுப்பாக இந் நூல் வெளிவந்துள்ளது. எதிர்காலத்தில் சிறந்த கவிஞனாக இந் நூலாசிரியர் திகழ்வார். என்ற நம்பிக்கையை இக்கவிதைகள் தருகின்றன.

**கலைமுகம் ஜனவரி - ஜீன்-2009.**



மானுடநேயர், இயற்கை உபாசகர், தத்துவத்தேடல் மிக்கவர், பதின்ம வயதிலுள்ள வித்தியாசமான இளைஞர். அவருடைய தேடல்கள், ஆசைகள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள், கண்ணீர் கதைகள், எல்லாம்.... சிறுசிறு துணுக்குகளாக, துண்டுகளாக (கவிதைவடிவில்) இங்கு களம் காண்கின்றன.

இந்த தொகுப்பிலுள்ள ஏறத்தாழ முப்பத்தைந்து கவிதைகளின் (ஐந்து மொழி பெயர்ப்புக் கவிதை உட்பட) பாடுபொருளும் அனேகமாக மானுடநேயம்தான். சுதர்சனுடைய எழுத்துக்களில் ஆங்காங்கே சமாந்தரமாய் கையாளப்பட்ட கவிதை தோய்ந்தவரிகள் எம்மை பிரமிக்க வைக்கின்றன. தன்மனதில் இடையறாது ததும்பிக்கொண்டிருக்கும் கவித்துவத்தை வெளிக்காட்டுகின்றார். அவலங்களை கண்டு துடிக்கின்ற மனங் கொண்ட வித்தியாசமான இளைஞர்தான் இவர். எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளுமில்லாமல் மனிதர்கள் எல்லாம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்று கனவு காண்பவர், அதற்காகப் பிரார்த்திப்பவர், தோற்றத்திலும் எளிமையும் துடிப்பும் மிக்கவர்.

இயற்கை அழிவுகள், யுத்த அழிவுகள், அவலங்கள், துன்பங்கள் என்பனவற்றின் மத்தியிலும், நம்பிக்கைகளைத் தொலைக்காத ஓர் எதிர்பார்ப்பு, இதுவே இவரது கவிதையின் தனித்துவம் - பலம் என்பேன்.

குப்பிழான் ஐ.சண்முகன்

Harikanan, Jaffna